

பதிப்பாசிரியர்:
முல்லை தங்கராசன்
மேத்தா
காமிக்ஸ்
மரணக்
கயிறு
ரூ
1-50

# மரணக்கயிறு


மரணத்தை எண்ணிக் கலங்கும் மனித கும்பலிடையே உயிரை திரணமாக எண்ணி ஆபத்தோடு விளையாடும் அசகாய சூரர்கள் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதற்கு இக்கதையில் வரும் ஜான், ஆல்பர்டோ கோல்டினி, அவரது இரு மகன்கள் நல்ல உதாரணங்கள்.
பிரமாதம்... இரட்டை குட்டிக்கரணமடித்து எத்தனை லாவகமாக அந்த கம்பி மீது பாலன்ஸ் செய்து நிற்கிறார் பாருங்கள்!
கீழே பாதுகாப்பு வலை கூட இல்லை... பயங்கரம்!


ஜான் கோல்டினியை முதன்முதலில் சந்தித்தது-அவருடைய வேலைக்கு உலை வைத்த அந்த விமான விபத்து நிகழ்வதற்கு சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகும்.
நீங்கள் நடத்திக் காட்டிய சாகஸ விளையாட்டுக்களைப் பார்த்து அப்படியே அசந்து போய்விட்டேன்... உங்கள் மனோ தைரியத்தை எப்படி பாராட்டுவது என்றே தெரியவில்லை எனக்கு.
நன்றி ஸார்... நீங்கள்கூட ஒரு விமானி என்று கூறினார் உங்கள் நண்பர்.. அப்படியானால் மனோதிடம் நிறைந்த நபர்தான் இல்லையா
நம் இருவருக்குமிடையே சில ஒற்றுமைகள் இருக்கின்றன. இருவருமே ஆபத்தோடு விளையாடுபவர்கள்-என் மகன்களும் இப்படித்தான்.


இவன் மூத்தவன் லூஜி-அமைதியான சுபாவம்-உறுதியான உடல்வாகு. அதனால்தான் ஆட்டத்தில் 'பிடியாளாக' இவனை பயன்படுத்திக் கொள்கிறேன். அந்தரத்தில் பறந்து வரும்போது எங்களுடைய கரங்களை லூஜியின் வலுவான கரங்கள் உறுதியாக பற்றி நாங்கள் ஆபத்தை நினைக்க வொட்டாமல் செய்கின்றன.


ஆல்பர்டோ தன் இன்னொரு மகன் இருந்த பக்கம் திரும்பினார்.
இவன் ரிக்கார்டோ- இளையவன்.இளங்கன்று பயமறியாது என்பது போல் தானும் என்னைப் போல் அந்தரத்தில் இரட்டை குட்டிக் கரணம் அடித்து கயிற்றில் பாலன்ஸ் செய்து நிற்க துடிக்கிறான். இன்னும் பயிற்சி போதாது என்று அடக்கி வைத்திருக்கிறேன். அதில் இவனுக்கு என்மேல் கோபம்...
என்றால் அதைச் செய்ய முடியும்- என் திறமையின் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது.


பார்த்தீர்களா... நடக்கப் பழகுமுன் ஓடவிடு என்னை என்று கேட்கும் பொறுப் பற்ற சிறுபிள்ளைத் தனத்தை.
இரட்டை கரணம் அடிக்கையில் அவர்களை நான் பற்றிக்கொள்ள வேண்டிய முறை சற்று மாறுபடும். அப்பா சரி சொல்லும்வரை ரிக்கார் டோவுக்கு அம்மாதிரியான பிடி கொடுக்கப் போவதில்லை நான்.


பின்னொரு நாள் முக்கியத்துவம் பெறப்போகும் வார்த்தைகள் சில அப்போது உரையாடலில் இடம் பெற்றன.
சின்னவயது முதலே சர்க்கஸ் கம்பெனி யோடு கொஞ்ச நாளேனும் கூட இருக்க வேண்டுமென்ற ஆசை எனக்குண்டு. அது ஒரு வித்தியாசமான-சுவையான அனுபவமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.
நீங்கள் எப்போது வேண் டுமானாலும் உங்கள் விருப்பம்போல் எங்க ளோடு வந்து தங்கலாம் வரவேற்க காத்திருக் கிறேன்!


இரண்டு வருடங்களுக்குப் பின் இத்தாலியில் அதே வார்த்தைகள் மீண்டும் பேசப்பட்டன.
..நீங்கள் எப்போது வேண்டுமானாலும் உங்கள் விருப்பம்போல் எங்களோடு வந்து தங்கலாம்-கோல்டினி கூறிய வார்த்தைகள் இவை. எனவே ஜான் அந்த சர்க்கஸ் கம்பெனிக்குச் சென்று தங்குவதற்கு வேறு காரணம் தேவையில்லை.
ஆனால் மிஸ்டர் நீரோ... ஜான் கோல்டினியின் அழைப்பு ஏற்று சர்க்கஸ் கம்பெனிக்கு செல்ல இப்போது சம்மதிக்கவேண்டுமே!
பேசிக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் உளவுத்துறை Q-பிரிவின் ஒரு கிளைக்கு தலைவர்
அப்படி அவர் சர்க்கஸ் கம்பெனிக்கு சென்றாலும் அங்கே நம்முடைய பணியில் ஈடுபடுமாறு தூண்டுவது எப்படி-அவர் நம் துறையின் ஊழியர் அல்ல என்பதை நினைவில் வைத்துக்கொண்டு சிந்தியுங்கள்.
வழக்கம்போல் ஏதாவது தந்திரம் செய்துதான் அவரை வழிக்குக் கொண்டு வர வேண்டும்.


நீரோ என்று தலைவரால் அழைக்கப்பட்ட மொட்டைத் தலை ஆசாமி இரக்கமற்ற ஆனால் திறமைமிக்க அதிகாரியாவார்.
நம் அதிர்ஷ்டம் ஜான் தற்சமயம் ரோமில் இருப்பது. அவரை வழிக்கு கொண்டு வர இன்றிரவு என் திட்டத்தை செயல் படுத்தப் போகிறேன்.
இருள் கவிழ்ந்து நெடு நேரத்திற்குப்பின் வெளிச்சமில்லாத சாலையொன்றில் தலைதெறிக்க ஓடிவந்து கொண்டிருந்தான் ஓர் ஆள்,
போலீஸ் ..!காப்பாற்றுங்கள்! அவன் என்னை விடாமல் பின் தொடர்ந்து வருகிறான்.
அவனுக்குப் பின்னால்... வேறொரு மனிதன் மீது நான்கு பேர் மறைவிலிருந்து பாய்ந்தார்கள்.
சீ... விடுங்கள் என்னை
நாங்கள் போலீஸார்... உன்னைத் தாக்கியவன் இவன்தானே!


அச்சத்தால் மிரண்டு போயிருந்த மனிதன் மெல்ல திரும்பி பார்த்தான்
இந்தப் பெட்டியில் முக்கியமான அரசாங்க ஏடுகள் இருக்கின்றன. இவற்றை கைப்பற்ற முயன்றான் இந்த ஆள்.
நீங்கள் யார் என்பது எங்களுக்குத் தெரியும்... உங்களோடு தொடர்ந்து வந்து தேவையான பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று எங்களுக்கு உத்தரவு... பார்த்துச் சொல்லுங்கள்-இவன்தானே உங்களை துரத்தியது.


வலுவாகப் பற்றியிருந்த கரங்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள திமிறினார் ஜான்.
ஆமாம்... இவனேதான்
உனக்கு பைத்தியம்தான் பிடித்திருக்க வேண்டும்... உன்னை இதற்குமுன் ஒருபோதும் பார்த்தேயில்லை அப்பனே...!


நான் சத்தியம் வேண்டுமானாலும் பண்ணத்தயார் என்னை துரத்திக்கொண்டு வந்தவன் இவன்தான்.
இதுபோதும் எங்களுக்கு தலைவரிடம் கொண்டு போகலாம் இவனை.
ஜானை ஆள் அரவமற்ற இன்னொரு சாலைக்கு தள்ளிக்கொண்டு போனார்கள்.
என் பெயர் ஜான் .. பிரிட்டிஷ் பிரஜை. நீங்கள் எல்லாம் யார் என்று எனக்குத் தெரிந்தாக வேண்டும்.
அதிகாரத்தோடு கேள்வி கேட்கும் உரிமை உனக்கில்லை. இருந்தாலும் கூறுகிறோம்-நாங்கள்பாதுகாப்பு படையை சேர்ந்தவர்கள்... இந்த இடம் கைதிகளை விசாரணை செய்ய நாங்கள் பயன்படுத்தும் இடங்களில் ஒன்று.


சிதிலமடைந்து கிடந்த ஒரு கட்டிடத்தின் உள்ளே-
உன்னை மாதிரி ஒற்றர்களை விசாரணை செய்யும்போது அது வேறு யார் காதிலும் விழுந்து விடக்கூடாது என்பதற்காகத் தான் இம்மாதிரியான ஆள்அரவ மற்ற இடத்தை தேர்ந்தெடுத்தோம்.
நான் ஒற்றன் அல்ல- நானொன்றும் அந்த மனிதனின் கையிலிருந்த பெட்டியை பறிக்க முயற்சிக்கவில்லை... நானொரு சாதாரண உல்லாசப்பயணி.


உயரமாக இருந்த ஆசாமி ஜானை ஏளனமாகப் பார்த்தார்...
உன்னைப்பற்றி எங்களுக்கு ஏற்கனவே தெரியும். விமானத்தை விபத்துக்குள்ளாக்கி நீ அப்பாவி பயணிகளை கொன்றது தெரியும்- பணக் கஷ்டத்தை சமாளிக்க நீ ஒற்றனாக பணியாற்றவும் துணிந்து விட்டாய்- இல்லையா ஜான்?
இல்லை- இல்லவே இல்லை!


மற்ற நான்கு மனிதர்களும் கோபாவேசமாக ஜானை நெருங்கினார்கள்.
ஒரு மணி நேர அவகாசம் போதும் பாஸ்!
நீ குற்றவாளி என்று எங்களுக்குத் தெரியும்-நீ யாருக்காகஇக்காரியத்தை செய்யத் துணிந்தாய் என்று தெரிய வேண்டும் எங்களுக்கு-தோழர்களே இவனிடமிருந்து உண்மையை வரவழையுங்கள் பார்க்கலாம்.


ஆனால் ஜானின் முகத்தில் முதல் குத்து விழவிருந்த வேளையில்
பொறுங்கள்... தப்பான ஆசாமியை பிடித்து வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.
மிஸ்டர் நீரோ இது உங்கள் துறைக்கு சம்பந்தமில்லாத விவகாரம்.


மொட்டைத்தலை ஆசாமி அதிகார தோரணையில் பேசலானார்.
சர்வதேச பாதுகாப்பு சம்பந்தப் பட்ட விவகாரங்கள் எதுவானாலும் எங்களுக்கு அக்கறையுண்டு. வேலையைதக்கவைத்துக்கொள்ளும் ஆசை உனக்கு இருக்குமானால் இந்த மனிதனோடுபேச-தனிமையில் பேச-உடனே ஏற்பாடு செய்.
சரி .. நீங்கள் பேசுங்கள் அவனோடு... நாங்கள் வெளியே நிற்கிறோம்


கண்டிக்கும் குரலில் பேசலானார் அந்த அதிகாரி.
எதையாவது செய்து வம்பை விலைக்கு வாங் கிக்கொண்டுவிழிப்பதே உன் தொழிலாகப் போய்விட்டது ஜான். நீ கைது செய்யப்பட்ட விஷயம் உடனே Q-பிரிவுக்கு எட்டியது உன் அதிர்ஷ்டம்தான்!
Q-பிரிவு? இப்போது தான் முதல் தடவை யாக அந்த பிரிவைச் சேர்ந்த ஒரு நபரை நேரில் பார்க்கிறேன். உங்கள் பிரிவுக்காக நான் பணியாற்றியிருக் கும் விபரத்தை அந்த ஆசாமிகளிடம் தெரிவியுங்கள்.


அந்த மொட்டைத் தலையரின் குரலில் வருத்தம் கலந்திருந்தது.
...இன்னமும் நீ எங்களுக்காக பணியாற்றிக் கொண்டிருந்தால் அது வேறு விஷயம். உளவாளிகள் எந்த நேரமும் கட்சி மாறி விடுவார்கள். என்றோ ஒரு நாள் நீ எங்களுக்காக பணியாற்றிய விபரம் உனக்கு எவ்விதத்திலும் இப்போது உதவப் போவதில்லை.
சரி .. அப்படியானால் இன்னமும்நான் உங்களுக்காக பணியாற்றிக் கொண்டிருப்பதாகவே அவர்களிடம் கூறி விடுங்கள்.
அதிர்ச்சி அடைந்தவர் போல் உடம்பை சிலிர்த்துக் கொண்டார் நீரோ.
ஊஹூம்... பொய் சொல்ல மாட்டேன் நான்... அது ரொம்ப தப்பு. நீ எங்களுக்காக செய்யக்கூடிய காரியம் ஒன்று கைவசம் இருக்கிறது. அதை செய்து தர நீ இப்போது சம்மதம் தெரிவித்தால் நான் சிறிதளவு பொய் சொல்லி உன்னை காப்பாற்றிவிட இயலும்.
என்ன காரியம் உங்களுக்காக நான் செய்ய வேண்டும்-முதலில் அதைச் சொல்லுங்கள்.


பாதுகாப்பு அமைச்சகம் சம்பந்தப்பட்ட ஒரு முக்கியமான குறிப்பேடு காணாமற் போய்விட்டது. அதை திருடியவன் ஒரு சாதாரண திருடன்... அவனுக்கு பணம்தான் குறி. அவனைப்பற்றி Q-பிரிவுக்கு அக்கறையில்லை.


அதை அவன் கொண்டு போய் யாரிடமோ ஒப்படைக்க முயற்சிப்பது தெரியவந்திருக்கிறது அதைப் பெறப்போகும் நபர் யார்... அந்த நபர் யாருக்காக இந்த திருட்டை ஏற்பாடு செய்தான் என்று தெரிய வேண்டியிருக்கிறது.
அந்த குறிப்பேடு திரும்ப பெறப்பட வேண்டும் ...ஆனால் அது கைமாறிய பின் இல்லையா?


திருப்தியோடு புன்னகை செய்தார் நீரோ.
இனி நான் போய் அவர்களிடம் நீங்களுக்காக பணியாற்றும் ஆசாமி என்று சொன்னால் அது பொய்யாக இருக்காது.. நல்லது-நான் போய் உடனடியாக உன் விடுதலைக்கு ஏற்பாடு செய்கிறேன்.
விடுதலையா... அதான் உங்களுடைய ஏவலாளாக பணியாற்ற சம்மதம் வாங்கிக்கொண்டு விட்டீர்களே!


சில நிமிடங்களுக்குப்பின் இருவரும் ஜானின் ஹோட்டலை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.
சரி மற்ற விபரங்களையும் கூறுங்கள் அந்த இரண்டு ஆசாமிகளையும் சந்திக்க நான் எங்கே போகவேண்டும்... திருடப்பட்ட குறிப்பேடு எப்போது எங்கே கைமாறப் போகிறது என்று தகவல் உண்டா?
நேபிள்ஸில் இடம் பெயர்ந்து செல்லும் ஒரு சர்க்கஸ் கம்பெனி அங்கே காட்சி தொடங்கவிருக்கிறது. நாம் குறிவைக்கும் ஆசாமி அந்த சர்க்கஸில் இருக்கிறான்.


குறிப்பேட்டை திருடியவனின் கன்னத்தில் X வடிவில் ஒரு தழும்பு இருக்கும் உன்னுடைய பழைய நண்பர் ஆல்பர்டோ கோடினியும் அந்த சர்க்கஸில் இருப்பதால் அங்கே போய் நீ ஒட்டிக் கொள்வதில் யாருக்கும் சந்தேகம் எழாது.
ஓகோ... ஆல்பர்டோ அங்கே இருப்பது கூட தெரியுமா உங்களுக்கு? Q-பிரிவு பிசாசுகளுக்கு தெரியாத விஷயமே இருக்காதோ!


X வடிவிலான தழும்புடைய மனிதன் குறிப்பேட்டை யாரிடம் கொடுக்கப் போகிறான் என்கிற விபரம் நாங்கள் அறியாதது!
நானொரு உதவாக்கரை என்கிற எண்ணம் எனக்கு உண்டு... ஆனால் உங்களோடு சம்பந்தப் படுத்திக்கொள்ளும்போது என்னையறியாமலே ஒரு வேகம் வந்து விடுகிறது...


மறுநாள்... ரோமின் பிரதான இரயில்வே ஸ்டேஷனில்-
சில மணி நேரத்தில் நேப்பிள் போய்ச் சேர்ந்து விடுவார்- நல்ல காரியம் பண்ணினாய் நீ
அப்படித்தான் நானும் எனக்கு சமாதானம் சொல்லிக்கொள்கிறேன் ஆனாலும் நேற்றிரவு எனக்கு தூக்கமில்லை
CAFFÈ 4200
LATTE
மனச்சாட்சிக்கு விரோதமான காரியத்தில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்போது எனக்கு குமட்டுகிறது. அதிலும் நேற்றிரவு அவரை நம் வழிக்கு கொண்டுவர நாம் ஆடிய நாடகம் இருக்கிறதே சே!
ஆச்சரியமாக இருக்கிறதே உன் பேச்சு. தொழிலில் மிகவும் நாட்டம் உடைய நபர் என்றல்லவா இத்தனை நாளும் உன்னைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்!


உறுதியான குரலில் பேசினார் நீரோ...
உளவுத் தொழிலில் ஈவு இரக்கம் பார்த்தால் முடியாது... என்றாவது ஒரு நாள் நீ Q-பிரிவின் தலைவராக வர வேண்டும் என்ற ஆசை உனக்கு இருக்குமேயானால் இப்போதே உன் மனச்சாட்சியைக் கொன்று போட்டுவிடு-இதுதான் என் அறிவுரை.
நாம் விரும்பினால் அந்த விமான விபத்துக்கு அவர் பொறுப்பாளியல்ல என்று நிரூபித்து அவர் மீதுள்ள பழியை துடைத்துவிட முடியும். ஆனால் நாம் அதை செய்யத் தயாரில்லை. அதுமட்டுமல்ல... அவர் வேறு ஏதாவது வேலையில் சேர முடியாமலும் இரகசியமாக தடை எழுப்பி வருகிறோம். ஒரு அப்பாவி மனிதனின் எதிர்காலத்தை சுயலாப நோக்கோடு வீண்டித்துக் கொண்டிருக்கிறோம்.
நான் அப்படி நினைக்கவில்லை... சாதாரண நபரை நம் பணிகளில் ஈடுபடுத்தி ஒரு திறமைமிக்க உளவாளியை உருவாக்கிவிட்டதாகத்தான் நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்... அவர் நமது பட்டியலில் இல்லாவிட்டாலும் மற்ற உளவாளிகளுக்கு எவ்விதத்திலும் சளைத்தவரல்ல அவர்-உண்டா... இல்லையா சொல்லுங்கள்!


தீமைக்கு எதிராக பணிபுரியும் வாய்ப்பு எல்லாருக்கும் கிட்டுவதில்லை... அவருக்கு நாம் அளித்துவரும் சந்தர்ப்பங்கள் அவரை ஒரு புகழ் வாய்ந்த பிரஜையாக உருவாக்கப் போவது நிச்சயம்... அதற்காக நமக்கு ஒரு நாள் அவர் நன்றி தெரிவிக்கத்தான் போகிறார்.
இடைப்பட்ட காலத்தில் அந்த தீய சக்திகள் அவரை பலிவாங்காமல் விட்டுவைத்தால் சரிதான்.
நேப்பிள்ஸின் புறநகர் பகுதியில்-சர்க்கஸ் பார்க்கஉற்சாகமாக சென்று கொண்டிருந்த கூட்டத்தோடு கலந்து கொண்டார் ஜான்.
இந்தப் பணியில் என் நெடுநாள் ஆசையையும் ஒருசேர அனுபவித்து விடலாம்.
TAXI



பழைய அரங்கம் ஒன்றில் சர்க்கஸ் நடந்து கொண்டிருந்தது
IL CIRCO GRANDE
ஆல்பர்டோ இரட்டை குட்டிக் கரணமடித்து அந்தரத்தில் கட்டப்பட்டிருக்கும் கம்பியில் பாலன்ஸ் செய்து நிற்கும் காட்சியை மறுபடியும் பார்க்க போகிறோம் என்கிற எண்ணமே மயிர்கூச்செறிய வைக்கிறது.
FANTASTICI
டிக்கட் கவுண்ட்டரை நோக்கி அவர் நடந்த போது-
நீங்கள்தானே மிஸ்டர் ஜான்... உங்கள் நண்பர் ஆல்பர்டோ கேட்டுக்கொண்டதின்பேரில் உங்களுக்காகவே இங்கே காத்துக்கொண்டிருக்கிறேன் நான். என் பெயர் ஹோப்லர்-இந்த சர்க்கஸின் உரிமையாளர்... வாருங்கள் போகலாம்.
நன்றி மிஸ்டர் ஹோப்லர்... ஆல்பர்டோ எப்படி இருக்கிறார்?


ஹோப்லரின் முகத்தில் சட்டென்று இருள் படர்ந்தது...
முன்போல் இல்லை. கரணம் அடிக்கும் காட்சியில் ஒரு நாள் பாலன்ஸ் தவறி கீழே விழுந்துவிட்டார். அவர் உயிர் பிழைத்ததே பெரிய ஆச்சரியம்.
இரட்டை கரணமடித்து கயிற்றில் பாலன்ஸ் செய்வது மிக ஆபத்தானது-இப்படி என்ருவது ஒருநாள் நடந்துவிடும் என்று நான் எதிர்பார்த்து பயந்ததுண்டு.


அந்த வித்தை கோல்டினி குடும்பத்தினருக்கு சர்க்கஸ் உலகில் பெரும்புகழை ஈட்டித் தந்துவிட்டிருக்கும்-அந்த விபத்து மட்டும் நிகழாதிருந்தால்.
இப்போது அந்த வித்தையை அவர்கள் செய்து காட்டுவதில்லையா? மற்ற ட்ரப்பீஸ ஆட்டக்காரர்களிடமிருந்து இவர்களுக்கு தனித்தன்மையைக் கொடுத்துக் கொண்டிருந்ததே அந்த வித்தைதானே!


அந்த வித்தையை அவர்கள் தொடர்ந்து செய்கிறார்கள்.. ஆனால் முன் மாதிரி இல்லை .. சும்மா சில நிமிடங்கள் மட்டுமே அவர்கள் தோன்றி மறைகிறார்கள்... நீங்களே வந்து நேரில் பாருங்களேன்.


பத்து நிமிடங்களுக்குப் பின்-
அது... ஆல்பர்டோவின் இளைய மகன்- ரிக்கார்டோ!


தன் அண்ணனின் வலுவான கரங்களி லிருந்து லாவகமாக நழுவி குட்டிக் கரணமடித்தான் ரிக்கார்டோ.
பரவாயில்லையே... நன்றாகத்தான் செய்கிறான்.
கவனித்துப் பாருங்கள்... அவனுடைய தந்தையைப் போல் இரண்டு முறை கரணம் அடிக்காமல் ஒரு முறை மட்டுமே கரணம் அடித்து முடிப்பான்.
ரிக்கார்டோ நிதானமாக கயிற்றில் காலூன்றி பாலன்ஸ் செய்துநின்றான்
இதுவும் நுட்பமான ஆட்டம்தான்... என்றாலும் இவனுடைய அப்பா செய்து காட்டும்போது அதில் ஒரு நளினம் இருக்கும்-மேலும் அது இரட்டைக்கரணம்
அது சரி... ஆல்பர்டோவை எங்கே கண்ணில் படவேயில்லை?


ரிக்கார்டோ கயிற்றில் பாலன்ஸ் செய்து நின்றுகொண்டபின் விளக்கு ஒன்று மேலே வட்டமிட்டுக்காட்டிய இடத்தில் ஒரு கோமாளி தோன்றினான்.
ஹே அங்கே பார்!
ஐயையோ... அவன் விழப் போகிறான்!


ஆனால் கடைசி நொடிப் பொழுதில்-
அது ஆல்பர்டோ! அவருடைய இன்றைய நிலைமை எப்படி ஆகி விட்டது பார்த்தீர்களா!
ஒரு கோமாளியாக பரிதாபம்!


இரட்டைக் கரணமடிக்க இனி ஆல்பர்டோவால் முடியாது... அந்த வித்தையை செய்ய தன் இளைய மகனுக்கு அவர் இன்னமும் அனுமதி வழங்கவில்லை.
நீண்ட நாளாகவே அந்த வித்தையை செய்துகாட்ட துடித்துக் கொண்டிருக்கிறான் அவன்.


சட்டென்று குரலை மாற்றி உற்சாகமாக பேசலானார் ஹோப்லர்.
எது எப்படியிருந்தாலும் உங்கள் செய்தி கையில் கிடைத்ததும் முதல் காரியமாக உங்களுக்கு ஹோட்டலில் ஓர் அறையை ஏற்பாடு செய்து விட்டார் ஆல்பர்டோ... அவருடைய காரவனில் இடவசதி போதாது.
HOTEL—DEL—TEATRO
நல்லது... காட்சிகள் முடிந்தபின் அவரை நான் சந்திக்க விரும்பு வதாக அவரிடம் தெரிவியுங்கள்!


ஜானின் அறையிலிருந்து சர்க்கஸ் அரங்கத்தை பார்க்க வசதி இருந்தது.
ஆல்பர்டோவைப் பற்றியே நான் நினைத்துக் கொண்டிருக்கக்கூடாது. நான் இங்கே வந்த நோக்கம்-X வடிவில் கன்னத்தில் தழும்பு உள்ள ஆசாமியை கண்டுபிடிப்பது... அவன் அந்த குறிப்பேட்டை யாரிடம் கொடுக்கிறான் என்று தெரிந்துகொள்வது.
IL CIRCO GRANDE


ஆனால் சர்க்கஸைக் காண வரும் பெரும் கூட்டத்தைப் பார்த்தால் தழும்புள்ள ஆசாமியைத் தேடுவது என்பது வைக்கோல் போரில் ஊசியைத் தேடிய கதையாகத்தானிருக்கும் போலும்.
HOTEL DEL TEATRO


இரண்டு மணி நேர இடைவெளிக்குப்பின் நண்பர்கள் சந்தித்துக் கொண்டனர்.
மிஸ்டர் ஜான் உங்களை மீண்டும் சந்திக்க நேர்ந்ததில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். உங்களோடு நிறைய பேச வேண்டும்.
உங்கள் நிகழ்ச்சியை நான் பார்த்தேன்... ரிக்கார்டோ பிரமாதமாக செய்கிறான்.


ரிக்கார்டோவின் கண்கள் கோபத்தில் ஜொலித்தன...
இரட்டை கரணமடிக்க என்னால் முடியும் பணக்காரர்களாக வசதியோடு வாழ வேண்டிய நாங்கள் இவருடைய பிடிவாதத்தால் வசதியற்ற வாழ்க்கை நடத்திக்கொண்டிருக் கிறோம். எங்கே நான் இவரையும் மிஞ்சி விடுவேனோ என்று இவருக்கு பயம்-அனுமதி மறுத்து வருகிறார்.
ரிக்கார்டோ... போதும் நிறுத்து.


ரிக்கார்டோ வேகமாக வெளியேறினான்.
என் இலட்சியத்தில் நான் எப்படியும் வெற்றிபெற்றே தீருவேன்- சீக்கிரமே பெரும் பணக்காரனாவேன் சர்க்கஸ் உலகில் நட்சத்திரமாக ஜொலிக்கத்தான் போகிறேன்.
அவனைச் சொல்லிக் குற்றமில்லை... இளமை வேகம் வேறென்ன. இரட்டை கரணமடிக்க ரொம்ப ரொம்ப நிதானம் தேவை- அது இவனிடம் போதாது..


என்னால் அவனை புரிந்துகொள்ள முடிகிறது... சர்க்கஸ் அவனுடைய இரத்தத்தில் ஊறிப் போய்விட்டி போய்விட்டிருக்கிறது... எப்படியும் இரட்டைக்கரணமடிக்கும் விளையாட்டை செய்தே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு அலைகிறான்.


பின்னர்...
ஜான் உங்களை பிறகு சந்திக்கிறேன்... வா லூஜி ரிக்கார்டோவை தேடிப் பிடித்து அவனை சமாதானம் செய்வோம்.
பாவம் ஆல்பர்டோ... இளவயது துடிப்பில் பொறுப்பில்லாமல் அவசரப்பட்டு மகன் கழுத்தை முறித்துக்கொள்ளக்கூடாதே என்ற ஆதங்கம் அவருக்கு-மகனோ அதை புரிந்து கொள்வதாக இல்லை


அங்கே நடந்த நிகழ்ச்சியால் பெருத்த சங்கடத்திற்குள்ளானார் சர்க்கஸ் உரிமையாளர் ஹோப்லர்.
அவனை எப்படியும் சமாதானப் படுத்திவிடுவார்கள்... வாருங்கள் என்னுடைய காரவனுக்கு போவோம்... காப்பி சாப்பிட்டுக்கொண்டே இந்த சர்க்கஸ் வாழ்க்கையைப்பற்றி விரிவாக பேசுவோம்.
நல்ல யோசனை... வாருங்கள் போகலாம்


இரண்டு மணி நேரம் சுவாரஸ்யமாக கழிந்தது
மாலை காட்சிக்கு மக்கள் வரிசையில் நிற்கத் தொடங்கிவிட்டார்கள். சர்க்கஸ் பார்ப்பதில் இங்குள்ள மக்கள் ரொம்ப ஆர்வம் காட்டுகிறார்கள்-எனக்கு நல்லதுதான்!
திடீரென்று சற்றுத் தள்ளி கீழே கிடந்த மின்சார வயரை இடறி விழப்போன நபரின்மீது ஜானின் கவனம் திரும்பியது. சட்டென்று அவருடைய மூளை சுறுசுறுப்படைந்தது.
அவனுடைய முகத்தில் Xவடிவில் தழும்பு- நான் தேடி வந்த ஆசாமி இவனேதான்.


ஹோப்லரின் மன்னிப்பை கோரிவிட்டு மின்னல் வேகத்தில் வெளியே பாய்ந்தார் ஜான்
அவனை பார்வையிலிருந்து தப்பிவிட்டுவிடக் கூடாது...
ஜான் பின்தொடர்வதை எப்படியோ யூகித்துவிட்ட அந்த மனிதன் தப்பியோடும் முயற்சியாக ஒரு காரவனை சுற்றி வந்தபோது வேறொரு நபரோடு மோதிக்கொண்டான்.
ஹே...க்!?


இரண்டு பேருமே நிலை தடுமாறி கீழே விழுந்தபோது கரும்சிறுத்தை ஒன்று இடையில் பாய்ந்தது.
கர்கர்ர்ர்..ர்ர்..


ஜான் அங்கே வந்து சேர்ந்தபோது அந்த மனிதன் மரண ஓலம் எழுப்பிக்கொண்டிருந்தான்.
கர்ர்ர்ர்ர
ஐயோ... செத்தேன்!


நீண்ட கழி ஒன்றை எடுத்து ஓங்கினார் ஜான்.
அந்த மிருகத்தை அடித்துவிரட்ட இது போதாதுதான்... என்றாலும் வேறு வழியில்லாதபோது இதை வைத்தாவது முயன்று பார்க்க வேண்டியதுதான்.
கர்ரர் ர்ர்ர்ர்ர்ர்
கழியினால் சிறுத்தையின் விலாவில் ஜான் இடித்ததும் அது அந்த ஆசாமியை விட்டுவிட்டு ஜானின் பக்கம் ஆக்ரோஷமாகத் திரும்பியது
ஹே... சுல்தான்-வா... இந்தப்பக்கம்!


இன்னமும் உறுமுவதை விடாதபோதிலும் மாஸ்டரின் உத்தரவுக்குக் கீழ்படிந்தது அந்த மிருகம்
போ... உள்ளே போ... சுல்தான்.
மிக மோசமாக காயமடைந்து விட்டான் இந்த மனிதன் ...உடனே மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும் இவனை.
பிராண்ட்... சிறுத்தையை கட்டிப்போடாமல் இப்படி உலாவவிடாதே என்று உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்...இப்படியொரு அசம்பாவிதம் என்றைக்காவது நிகழத்தான் போகிறது என்று நான் பயந்து கொண்டிருந்தது இன்று சரியாகி விட்டது.
சுல்தான் யாரையும் காயப்படுத்தாது... இவன் என்மீது தற்செயலாக மோதினாலும்... என்கூட சண்டை போடு கிறானாக்கும் என்று தப்பாக புரிந்துகொண்டு பாய்ந்து விட்டது சுல்தான்.


நான் உடனே சுல்தானை திரும்ப அழைத்திருக்க வேண்டும்... கீழே விழுந்த அதிர்ச்சியில் எனக்கு என்ன நடக்கிறதென்றே சில வினாடிகள் புரியவில்லை... அதற்குள் அந்த ஆசாமியை தாக்கி விட்டது சுல்தான்.
ஓகோ... இவன்தான் ரிங் மாஸ்டரோ! அமெரிக்கன் போலிருக்கிறான்.


ஹோப்லரின் காரை ஓட்டிவந்து நிறுத்தினான் ஒருவன்
அந்த மனிதனை மருத்தவமனைக்கு நான் கொண்டு போகிறேன் .. அடுத்த காட்சிக்கான வேலைநிறைய இருக்கும் உங்களுக்கு... போய் அதைக் கவனியுங்கள் நீங்கள்
ரொம்ப நன்றி ஜான்... அவசர தகவல் இருந்தால் எனக்கு உடனே சொல்லியனுப்ப தவறாதீர்கள்-என்ன?


இருபது நிமிடங்களுக்குப்பின்...
நீ இங்கே ஏன் வந்தாய் என்ற காரணம் எனக்கு நீ சொல்லாமலே தெரியும் அந்தக் குறிப்பேட்டை யாரிடம் கொடுத்தாய் என்பதை மட்டும் சொல் போதும்.
சொல்கிறேன்... அவன்... அவன் என்னை கொல்ல முயற்சித்தான்.


சட்டென்று அவன் தலை பக்கவாட்டில் சரிந்தது...
மயக்கமடைந்து விட்டான்... உங்கள் விசாரணையை பிறகு தொடரலாம் மிஸ்டர் ஜான்... ரொம்பவும் மோசமாகத்தான் காயம் பட்டிருக்கிறது... நிறைய ஓய்வு தேவை இவனுக்கு.


அவன் மீண்டும் சுயவுணர்வு பெற்றதும் அவனோடு நான் பேசவேண்டியிருக்கிறது டாக்டர். விஷயம் அத்தனை முககியத்துவம் வாய்ந்தது
சரி... உங்கள் இருப்பிடத்தை தெரிவித்து விட்டுப் போங்கள்... தகவல் அனுப்புகிறேன்


சர்க்கஸ் நடைபெறும் இடத்திற்கு ஜான் திரும்பியபோது நன்றாக இருட்டிவிட்டது
நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.. பிராண்டின் மிருகங்கள் உறுமும் சப்தம் தெளிவாக விழுகிறது என் செவியில்.


பிராண்ட் ஒரு வித்தியாசமான பேர்
வழியாக தோற்றமளிக்கிறான்,
பெரிய தொகையை முன்வைத்தால்
யாருக்காகவும் எந்தக காரியத்தை
யும் செய்ய தயங்கமாட்டான் என்று
தோன்றுகிறது-சிறுத்தையை
திரும்ப அழைப்பதில் வேண்டு
மென்றே தாமதம் காட்டினானோ?


நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரவன் வரிசையின் பின்னே நீண்டு கிடந்த நிழலில் ஒளிந்து நின்றார் ஜான்.
இன்றிரவு நான் தூங்கப் போவதில்லை... கண் காணிப்போடு இருக்கப் போகிறேன்... ஏதாவது நிகழாமற் போகாது.


சர்க்கஸ் நிகழ்ச்சிகள் முடிந்து விளக்குகள் எல்லாம் அணைக்கப் பட்டபின் அங்கே மயான அமைதி நிலவியது.
வாய்ப்பு குறைவுதான்... என்றாலும் அந்த குறிப்பேட்டை பெற்றுக் கொண்ட நபர் நிச்சயம் அதை பாதுகாப்பான வேறோரிடத்துக்கு கொண்டு செல்ல முயற்சிப்பார் என்பது என் யூகம்.


இயக்கமிழந்து கிடந்த சுற்றுப்புறத்தில் திடீரென்று சிறு சலனம் ஏற்பட்டது.
அங்கே யாரோ பதுங்கிப் பதுங்கிப் செல்கிறார்கள்.


ஒரு கதவை திறந்து மூடும் சப்தம் மெலிதாக வந்து ஜானின் செவியை தொட்டபோது அந்த ஆசாமி பார்வையிலிருந்து மறைந்து போனான்.
அரங்கத்தினுள் நுழைந்துவிட்டான் போலிருக்கிறது.
நிகழ்ச்சியில் பங்கு பெறுபவர்கள் நினைத்த நேரத்தில் ஒத்திகை பார்க்க வசதியாக ஒவ்வொருவரிடமும் அரங்கத்தின் சாவி இருப்பதுண்டு- ஆனால் இந்த அகால வேளையில்


நின்று செவியை கூர்மையாக்கிக் கொண்டு சப்தம் ஏதாவது வருகிறதா என்று கவனித்தார்-ஊஹூம் சற்று நேரத்திற்குப்பின் மெல்லிய காலடியோசை கேட்டு திரும்பினுர் ஜான்.


பிரண்டோவின் சிங்கங்கள்... கட்ட விழ்த்து விடப்பட்டி ருக்கின றன!


சிங்கங்கள் வேலியிடப்பட்ட வட்டத்திற்குள் வந்து சேர்ந்தபோது வேறொரு ஓசை மேலே கேட்டது.
மேலே போய்விட்டானா அந்த ஆசாமி


ஓசை எழுப்பாமல் உயரத்திலிருந்த குறுக்குப் பாலத்தில் ஏறி நடந்தார் ஜான்.
குறிப்பேட்டோடு திரியும் அந்த மனிதனை இப்போது வளைத்து மடக்க தவறினால் இனனொரு வாய்ப்பு கிடைக்காமலே போய்விடலாம்.


தன்னை நோக்கி ஏதோ விரைந்து வருவதை உள்ளுணர்வு உணர்த்த சட்டென்று திரும்பினார் ஜான்...
என்ன அது...!
ஜான் சுதாரித்துக் கொள்ளுமுன் அந்த மணல் மூட்டை அவர்மீது விசையோடு மோதி நிலைதடுமாற வைத்தது.
ஹா ஆ ஆ...!


பாலத்திலிருந்து கீழே விழுந்த ஜான் அதிர்ஷ்ட வசமாக பாலத்தின் கட்டைகளை பற்றிக் கொண்டு தொங்கலார்.


நேர்கீழே-சிங்கங்கள் ஆக்ரோஷமாக கர்ஜித்துக் கொண்டிருந்தன.
கீழே விழுந்திருந்தேன் என்றால் இந்நேரம் இந்த மிருகங்கள் என்னை நார்நாராய் கிழித்துப் போட்டிருக்கும்


பாலத்தின் மேலே ஏற அவர் முயன்று கொண்டிருந்தபோது-
ஊஹூம் உன்னை தப்பவிடமாட்டேன்
என் விரல்களை அழுத்தமாக மிதித்தான் என்றால் சிங்கங்களுக்கிடை போய் விழத்தான் போகிறேன்.


தன் சக்தியை எல்லாம் ஒன்று திரட்டி ஓர் எம்பு எம்பி அருகில் தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சலைப் பற்ற முயன்றார் ஜான்.


அதில் வெற்றியும் பெற்றார்.
பிடித்து விட்டேன்... இனிப் பயமில்லை


அவருடைய பிடி மறுகணம் நழுவி விட்டாலும் கிடைத்த சிறு உதவியின் மூலம் மிருகங்கள் இருந்த வேலியின் மேல் இறங்கிக்கொண்டார்.


அங்கே என்ன சப்தம்...
ர்ர்உர்


அரங்கினுள் வெளிச்சம் பரவியபோது அங்கே ஹோப்லர் நிற்கக் கண்டார்.
இதென்ன குழப்பம்?
ஹோப்லர்... நான் சந்தேகப்படுவோர் பட்டியலிலிருந்து இவர் பெயரை தாராளமாக நீக்கிவிடலாம்.
ஹோப்லருக்கு விளக்கிக் கொண்டிருக்க நேரமில்லை... அரங்கின் பின் பகுதியை நோக்கி ஓடினார் ஜான்.
எனக்கு பதில் சொல்லிவிட்டுப் போ...
அவன் இந்நேரம் தப்பியோடிப்போயிருப்பான்... சே அருமையான வாய்ப்பு அநியாயமாக கைநழுவிப் போய்விட்டது


நடந்ததை ஹோப்லருக்கு ஜான விளக்க முற்பட்ட போது வேறு சிலரும் அங்கே வந்து சேர்ந்தார்கள்.
எல்லாவற்றையும் உங்களுக்கு விளக்கிக்கொண்டிருக்க என்னால் முடியாது ஹோப்லர் ஒரு ஆளைப் பின்தொடர்ந்து உள்ளே வந்தேன் நான அவன் என்னைத் தீர்த்துக்கட்ட முயன்றான்.
என் மிருகங்களை கட்டவிழ்த்துவிட்ட மடையன் யார்?


அவன் கோமாளி வேடமணிந்திருந்தான. என்னை கொல்ல முயன்றான். அது நீங்களாக இருக்குமோ என்ற சந்தேகம் எனக்கிருந்தது. ஆனால் நீங்களாக இருக்கமுடியாது என்று உறுதியாக தெரிகிறது இத்தனை சீக்கிரத்தில்வேடத்தை மாற்றிக் கொண்டு வர சாத்தியமில்லை
கோமாளியா...? அதாவது நீ சொல்வதைப்பார்த்தால்-


ஆல்பர்டோ... அல்லது நிகழ்ச்சியின்போது அவர் தோன்றுவதைப்போல் வேடமணிந்த வேறொரு ஆசாமி...
லூஜியும் வருகிறான்...
லூஜி ரொம்பவும் கவலையோடு காணப்பட்டான்.
நான் விழித்துக்கொண்ட போது அருகே அப்பாவையும் தம்பியையும் காணவில்லை. அவர்களை தேடிக் கொண்டு இங்கே வந்தேன்.


அப்போது...
ஹே... ரிக்கார்டோ- அப்பா எங்கே... அவரை நீ பார்த்தாயா?
ஊஹூம்... நானும் அவரைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன்...
நான் விழித்துக்கொண்டபோது அவர் காரவனில் இல்லை. நமக்கிடையே நடந்த காரசாரமான விவாதத்தால் மன அமைதியிழந்து தூக்கம் வராமற்போய் காற்று வாங்க வெளியே சென்றிருப்பார் என்று எண்ணி தேடலானேன்... உள்ளே விளக்கு எரிவது தெரிந்தது... ஒருவேளை இங்கே இருப்பாரோ என்று எண்ணி வந்தேன்.


எல்லோரும் வெளியே சென்று தேட முற்பட்டபோது ஓர் உருவம் மெல்ல அவர்களை நோக்கி வந்தது.
அதோ அவர்...
ஆல்பர்டோ... எங்கே போயிருந்தீர்கள் இத்தனை நேரமும்?


தெளிவில்லாமல் தயக்கத்தோடு பேசினார் ஆல்பர்டோ...
நான்... நான் நடந்ததை உங்களிடம் கூற முடியாது.
பார்த்தீர்களா... கோமாளியின் உடைகளும் மேக்கப் சாதனங்களும் இங்கே கிடக்கின்றன.


என் உடைகள்- இங்கே எப்படி வந்து சேர்ந்தன?
ஜான்... உங்களுக்கு மருத்துவமனையிலிருந்து போன் கால் வந்தது. யாரோ ஓர் ஆசாமி உங்களோடு பேசும் நிலையிலிருக்கிறானாம்-இந்த விபரத்தை சொன்னால் மற்றதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று போனில் பேசிய டாக்டர் குறிப்பிட்டார்.


தன் நண்பரின் பக்கம் திரும்பிய ஜானின் நெஞ்சு கனத்தது.
ஆல்பர்டோ... நீங்களும் என்னுடன் வருகிறீர்கள்...என் வசம் இருக்கும் துப்பாக்கியை நான் பயன்படுத்த தூண்டமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.
துப்பாக்கிக்கு அவசியமில்லை ஜான்...நான் உங்களோடு வருகிறேன்.


மருத்துவமனையில் டாக்டரை சந்தித்தனர்.
23
அந்த மனிதன் உண்மையிலேயே அதிர்ஷ்டக்காரன்... சிறுத்தையின் பிராண்டல்களால் ஏற்பட்ட காயத்தை தவிர நெஞ்சுக்குக் கீழே ஆழமான கத்திக்குத்து காயமும் இருக்கிறது-இருந்தாலும் உயிர் பிழைத்து விடுவான்... சந்தேகமில்லை!
அந்த மனிதன் இருந்த அறையினுள் அவர்கள் நுழைந்தனர்.
அந்த குறிப்பேட்டை நான் அவனிடம் கொடுத்ததும்- மடையன் என்னை நிரந்தரமாக ஒழித்துக்கட்ட முடிவு பண்ணி கத்தியால் குத்தினான்... அவனுடைய பெயர் உங்களுக்கு தெரிய வேண்டும்- இல்லையா...


முப்பது நிமிட இடைவெளிக்குப்பின் இருவரும் மருத்துவ மனையை விட்டு வெளியே வந்தனர்.
என்னை மன்னியுங்கள் ஆல்பர்டோ... என் கடமையை நான் செய்தாக வேண்டும்.
எனக்குத் தெரியும் ஜான்... உங்களை நான் தடுக்கப் போவதில்லை.


ஆனால் ஒரு வேண்டுகோள் விடுக்கப் போகிறேன். சர்க்கஸ் இன்று காலைக் காட்சி உண்டு. அந்தக் காட்சி நடந்து முடியும்வரை தயவு செய்து விஷயத்தை யாரிடமும் வெளியிடாதீர்கள். இன்னமும் அந்த மனிதன் பேசும் நிலையில் இல்லை என்பதாகவே இருக்கட்டும்.-எனக்காக இதை செய்வீர்களா?
சம்மதிக்கிறேன் ஆல்பர்டோ ..ஆனால் உங்கள் வேண்டுகோளுக்கு அர்த்தம்தான் விளங்கவில்லை எனக்கு.


உங்களுக்கும் மகன் இருந்தால் என் இதயத்துடிப்பு உங்களுக்குப் புரியும். இரட்டை கரணமடிக்கும் வித்தையை செய்ய நான் அனுமதி மறுத்து வருவதால் ரிக்கார்டோ உள்ளுக்குள் வெதும்பிக் கொண்டிருக்கிருன்.


இன்னும் அவனுக்கு பயிற்சி போதாது... என்ருலும் லூஜிக்குப் பதிலாக பிடியாளாக நான் இருந்தால் இந்த உரமேறிய அனுபவம் வாய்ந்த கைகளை நம்பி அவனை அந்த வித்தையை செய்ய அனுமதிக்க முடியும். இந்த சந்தர்ப்பமும் கிடைக்காவிடில் மறுபடியும் அவனுக்கு இந்த வாய்ப்பை கொடுக்க சமயம் வாய்க்காமலே போய்விடுமோ என்று துடிக்கிறது என் மனம்.


தந்தையின் திடீர் முடிவை கேட்ட ரிக்கார்டோவுக்கு தன் செவிகளை நம்ப முடியவில்லை
பிரமாதமாக செய்து காட்டுகிறேன் பாருங்கள்.. நீங்கள்தான் இத்தனை நாளும் அனுமதி வழங்காமல் ஏமாற்றிக்கொண்டு வந்துவிட்டீர்கள்.
ஊஹூம்... உணர்ச்சி வசப்படாமல் செய்ய வேண்டும்... ரொம்ப அமைதியாக, முழுக் கவனமும் ஆட்டத்தில் லயிக்கும்படியாக வைத்துக் கொள்ளவேண்டும்.


சில நிமிடங்களுக்குப் பின் தந்தையும் மகனும் அரங்கத்தின் உச்சியிலிருந்தார்கள்.
வா... ரிக்கார்டோ...!
என் அதிர்ஷ்ட தினம் இன்று... சீக்கிரமே புகழின் உச்சிக்குப் போய்விடுவேன் நான்


மறுகணம் ..
முதன் முதலாக இரட்டை கரண மடிக்கப் போகிறான்... சொன்ன படி சாதித்துக் காட்டுவானா... இல்லை...
அது தெரிந்தால் நான் ஏன் இப்படி குடல் மேலெழும்பி தொண்டைக்குவர பதறிக்கொண்டு இங்கே நிற்கப் போகிறேன் ஜான்!


ஊஞ்சல் கட்டையை விட்டுவிட்டு தந்தையின் கரங்களை நோக்கி வந்தான் ரிக்கார்டோ...
கடைசிவரை ரிக்கார்டோவின் ஆசைக்கு ஆல்பர்டோ அனுமதி வழங்க மறுத்து விடுவாரோ என்ற சந்தேகம்கூட எனக்கு ஏற்பட்டதுண்டு.


ஒன்றையொன்று பற்றிக்கொள்ள விழைந்த இரு ஜோடி கரங்களும் பாதையிலிருந்து சிறிது விலகிவிட...


கீழேயிருந்த மனித வெள்ளம் கிறீச்சிட்டுக் கத்தியது...
அவன் விழுகிறான்
ஐயோ...
கீழே பாதுகாப்பு வலை இல்லை!


ஊஞ்சல் கட்டையில் தலை கீழாக தொங்கிக்கொண்டி ருந்த ஆல்பர்டோ அந்த கொடிய காட்சியை காண சகியாமல் கரங்களால் முகத்தை பொத்திக் கொண்டுவிட்டார்.


ஒரு சில கணங்கள் அனைவரும் பிரமை பிடித்தாற்போல் செயலற்று நின்றுவிட்டனர்... பின்னர் குழப்பம் தலைதூக்கியது அங்கே-
ஜான்... நீ ஆல்பர்டோவை இந்த நேரத்தில் கைது செய்வது சரியாக இராது...
நானென்றும் அவரை கைது செய்யப் போவதில்லை.


மருத்துவமனையில் இப்போது இருக்கும் ஆசாமியை கத்தியால் குத்தியது ஆல்பர்டோ இல்லை... ரிக்கார்டோ! அடையாளம் தெரியாமலிருக்க கோமாளி வேடமிட்டுக்கொண்டு என்னைத் தீர்த்துக்கட்ட முயற்சித்திருக்கிறான்.
ஆல்பர்டோ குற்றவாளி இல்லையெனில் நேற்று தனியாக எங்கே போய்விட்டு வந்தார் என்று நாம் விசாரித்தபோது பதில் சொல்ல மறுத்ததேன்?
திருட்டுப் பொருள் ஒன்று காரவனில் இருக்கக் கண்டிருக்கிறார் ஆல்பர்டோ. அதை அங்கே ஒளித்து வைக்க முயற்சிப்பவர் யாரென்பதை யூகித்து விட்டிருக்கிறார். அந்தப் பொருள் எங்கே இருக்க வேண்டுமோ அந்த இடத்துக்கு தபாலில் திருப்பி அனுப்பவே நகருக்குள் போய் வந்திருக்கிறார் ஆல்பர்டோ இம்மாதிரி செய்வதன்மூலம் திருட்டு விவகாரம் அப்படியே அமுங்கிப்போய் விடும் என்று நம்பியிருக்கிறார்.


ஆனால் தன்னால் காயமடைந்த ஆசாமி என்னிடம் அனைத்தையும் தெரியப்படுத்தியிருப்பான் என்று புரிந்துகொண்ட ரிக்கார்டோ, நான் குற்றவாளிக்கு குறிவைத்து காத்திருப்பதை அறிந்து நான் அறிய அரங்கினுள் நுழைந்திருக்கிறான். இந்த விவகாரம் உண்மையிலேயே எனக்குத் தெரியும் என்றால் கட்டாயம் பின்தொடர்ந்து வருவேன் என்பது அவனுடைய கணிப்பு.
இதோ வருகிறார் ஆல்பர்டோ...
அப்போது ஆல்பர்டோவின் முகத்தில் கவிழ்ந்திருந்த சோகத்தை பின்னர் ஆயுளுக்கும் ஜானால் மறக்கவே முடியவில்லை
ஏதோ நடந்தவரை சரிதான் என்று நினைக்கத் தோன்றுகிறது ஜான். என் வேண்டுகோளுக்கு செவிமடுத்து ஒரு மகனின் கடைசி ஆசையை நிறைவேற்ற தந்தைக்கு வாய்ப்பு வழங்கி அதுவரை விஷயத்தை வெளியில்விடாமல் பொறுமை காட்டிய நண்பரே! உமக்கு என் நன்றி!


இரட்டை கரண விளையாட்டிற்கு தீராத சாபம் ஒன்று இருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன்... அதனால் இனி என்றைக்குமே நானோ என் வம்சாவழியினரோ இந்த ஆட்டத்தை நடத்திக்காட்டப் போவதில்லை... இது சத்தியம்!
மறுநாள்-ரோமில்...
நம்முடைய பணிவெற்றிகரமாக முடிந்துவிட்டது ஸார்... திருடுபோன குறிப்பேடு திரும்பவந்து சேர்ந்துவிட்டது. திருட்டில் சம்பந்தப்பட்டவர்கள் பெயரும் நமக்கு தெரியவந்திருக்கிறது
தழும்பு அடையாளமுள்ள ஆசாமியைப் பற்றி நமக்கு ஏற்கனவே தெரியும். யார் அந்த இன்னொரு நபர்?


நீரோவின் குரலில் வெறுப்பு இளையோடியது...
இம்மாதிரி வேலைகளுக்கு முற்றிலும் புதியவன். இல்லாத திறமையை இருப்பதாக கற்பனை செய்து கொண்ட இளைஞன்-தன்தந்தையிட மிருந்து பிரிந்து தனியாகச் சென்று தன் திறமையை வெளிப்படுத்த பணம் தேவைப்பட்டிருக்கிறது அவனுக்கு
நேர்வழி பல இருக்க குறுக்குவழியில் இறங்கி விட்டானுக்கும். அதுசரி- நம் நண்பர் ஜானைப்பற்றி தகவல் ஏதும் உண்டா?


நீரோவின் பதிலில் வியப்பு கலந்திருந்தது.
நமக்காக இந்தப் பிரச்னையை தீர்த்து வைத்துவிட்ட ஜான் ஏனோ பிரச்னை இன்னமும் தீரவில்லை என்பதாக நடந்து கொள்கிறார்... எனக்கு கொஞ்சமும் புரியவில்லை!




தி மேத்தா பப்ளிகேஷன் நிறுவனத்திற்காக அச்சிட்டு வெளியிடுபவர்:
R. அசோக் மேத்தா. முகவரி : 18, நேரு ரோடு, சிவகாசி-626 123.
பதிப்பாசிரியர்: முல்லை தங்கராசன். வெளியீடு 3. 1984


விரைவில் வெளிவருகிறது!
அசோக் காமிக்ஸ்
உயிரோட்டம் மிக்க சித்திரங்கள்! உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அற்புதக் கதைகள்!
வெளியிடுவோர்:
தி மேத்தா பப்ளிகேஷன்,
18, நேரு ரோடு, சிவகாசி_626123.